# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



137

**உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்,**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு.சி. மதிவாணன், பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்**

ந.க.எண். 4605/2020/உ திரு நாள்: 18.03.2022.

**திட்ட அனுமதி எண் :70/2022**

**உள்ளாட்சியின் பெயர்: சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி**

பொருள் : **திட்ட அனுமதி - குடியிருப்பு மனைப்பிரிவு** - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - அன்னூர் வட்டம் - சர்க்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் - கீரணத்தம் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச. எண். 636/1B2A-ல் 1.08¼ ஏக்கர் (4380.69ச.மீ) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர்கள் திரு. B. ராஜகோபால் மற்றும் திருமதி B. கலைசெல்வி கோயம்புத்தூர் அவர்கள் விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் : 07.12.2020.
2. இணையவழி விண்ணப்பம் எண்: 201900301015617 நாள்: 26.11.2019
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் :29.07.2021-ல் சாலையமைப்பு வரைபடம் ஒப்புதலளிக்கப்பட்டது.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 19799/2020போ, நாள் 24.12.2020
5. மனுதாரர் திரு. B. ராஜகோபால் மற்றும் திருமதி B. கலைசெல்வி அவர்கள் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்து தானப்பத்திரம் பெறப்பட்ட நாள் : 13.12.2021.
6. அரசாணை எண் 138 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.06.2004.
7. அரசாணை எண் 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017
8. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020.
9. அரசாணை எண் 141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 23.09.2020.
10. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(1) நாள் 09.12.2020.
11. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 30.08.2017.

1) B. Rajagopal 2) B Kalaiselvi

12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/ LA1/ நாள் 08.09.2017.
13. சார்பதிவாளர், பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண். 119/2021 நாள் 01.12.2021.
14. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண். 33 நாள் 04.11.2020.
15. மனுதாரர் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள் : 03.01.2021.

**********

உத்தரவு:

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 13.07.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 5-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.16609 நாள்: 30.09.2021 மற்றும் தானப்பத்திர எண். 16610 நாள்: 30.09.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

1. கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், சர்க்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம், கீரணத்தம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச. எண். 636/1B2A-ல் 1.08¼ ஏக்கர் (4380.69ச.மீ) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு, உள்ளூர் திட்டக்குழும தீர்மானத்தின்படியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி **ம.வ./கோ.உ.தி.கு. எண் : 61/2022** என்ற எண்ணில் தொழில்நுட்ப அனுமதியும், **திட்ட அனுமதி எண் : 70/2022** என்ற எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
2. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 9(ஆ)-ன்படி அவ்வாணையில் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
5. உத்தேச மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிக்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை-I

1 (a) பார்வை 10-ல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்டுள்ள TNCDBR 2019 விதி எண் 17 (11)-ன்படியும் மாநகராட்சி, நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenties like roads, storm water drains and street lights from the applicants" After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body"

2 (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்காகவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் (EWS) மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020-ன்படி (EWS) மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3 பார்வை 11-ல் கண்டுள்ள அரசு கடிதம் மற்றும் பார்வை 12ல் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைபபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

1) B. Raj... 2) B. Tamilselvi

4 The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and U Development Department Dated. 22.06.2017 has approved the Tamil Na Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has t advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் /இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர்

22/03/2022

**இணைப்பு**

1. முத்திரையிட்ட வரைபடங்கள் - 4
2. நிபந்தனை படிவம் - 4
3. சாலை ஒப்படைப்பு அசல் பத்திரங்கள்

1. இருப்புகோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் - 1)
2. கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் - 1)

**பெறுநர்**

தலைவர்
கீரணத்தம் ஊராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

**நகல் : (உள்ளாட்சி வழியாக)**

B. ராஜகோபால் மற்றும் B. கலைச்செல்வி
16/1. அரண்மனை தோட்டம்
மணியகாரம்பாளையம்
கணபதி, கோயம்புத்தூர் - 6.
Mob : 9578440092
E-mail:bestswami@gmail.com

**நகல்**

TamilNadu Real Estate Regulatory Authority,
No.1A, Ist Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai – 600 008.

# தமிழ்நாடு அரசு
## நகர் ஊரமைப்புத் துறை
## கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும அலுவலகம்
## கோயம்புத்தூர்

ம.வ./கோ.உ.திகு எண் 61/2022
திட்ட அனுமதி எண் 70/2022

கோப்பு எண். 4605/2020/உ.திகு

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY ) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் / கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய தலைவர், கீரணத்தம் ஊராட்சி அவர்களை அணுகி அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்,

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

1) 2)

10. மனுதாரர். நகர் ஊரமைப்புத்துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 120cmx60cm அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே. உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்**

| விவரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | **1.08 ¼ ஏக்கர் அல்லது 4380.69 ச.மீ** | |
| ஒதுக்கிய மனைகள் | **16** | |
| **பொது ஒதுக்கீடு**<br>**மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.** | | |
| 1. மனைப்பிரிவின் சாலை பரப்பு<br>உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | **970.25 ச.மீ** | |
| 2. நீர்வழிப்பாதை | **35.50 ச.மீ** | |
| 3. பூங்கா பரப்பு | **341.04 ச.மீ** | |
| **பூங்கா ஒதுக்கீடு** 342 ச.மீ பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகை **ரூ.1,71,000/- (ரூபாய் ஒருஇலட்சத்து எழுபத்து ஓராயிரம் மட்டும்)** நாள். 21.02.2022-ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது). | | |
| 4. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு பொது உபயோகம் - I | **17.48 ச.மீ** | **0.51%** |
| 5. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது (TANGEDCO க்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) பொது உபயோகம் - II | **17.25 ச.மீ** | **0.51 %** |

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர்

22/03/2022

145

கீரணத்தம் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்
நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.R.பழனிசாமி

ந.க.எண்.06/2021

நாள்: 06.06.2022

பொருள்: கோயம்புத்தூர் மாவட்டம் - சர்க்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் கீரணத்தம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள்: 636/1B2A -ல் 1.08 1/4 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஊராட்சி அனுமதி வழங்கி ஆணையிடுவது - தொடர்பாக.

பொருள்
1.மனுதாரர் திரு.B.ராஜகோபால் மற்றும் திருமதி.B.கலைசெல்வி விண்ணப்ப நாள்: 07.12.2020
2. தலைவர் ,கீரணத்தம் ஊராட்சி அவர்களின் தீர்மான எண் : 493 நாள் :06.06.2022
3 அரசாணை எண் :18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகாராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
4. கோயமுத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் உறுப்பினர் செயலர் அவர்களின் ந:க:எண்:4605/2020 உதிகு நாள்:18.03.2022
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந:க:எண்:13686/2017/LA1 நாள்:08.09.2017

-----------------------------

உத்தரவு

பார்வையில் குறிக்கப்பபட்டுள்ள அனைத்து கடிதங்கள் மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டகுழுமம் உறுப்பினர் செயலர் அவர்களின் ந.க.எண் : 4605/2020//உதிகு நாள்: 18.03.2022- ன் படி கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டம் கீரணத்தம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள்: 636/1B2A -ல் 1.08 1/4 -ல் ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவிக்கு கீரணத்தம் ஊராட்சியில் தானமாக வழங்கக்கூடிய சாலைகள் மற்றும் பூங்காவிற்கான பொது திரவிடங்கள் பெரியநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண பதிவு எண்:16609,16610/2021 மூலம் பதிவு செய்யப்பட்டு மேற்படி அசல் ஆவணமும் ஊராட்சியில்

1) B.Rajagopal

2) B.Kaiselvi

பெறப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள மனைபிரிவிற்கு இதன் மூலம் ஊராட்சி அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள் அரசு புறம்போக்கு காலிமனை திறந்தவெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் உத்தேச காலை மற்றும் ரயில் தண்டவாளம், பொதுபாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனைபிடம் அதிக உயர் மின்னழுத்த பாதை போன்றவை அமைந்திருக்க கூடாது.

2. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்க சான்றின் சரீத்தன்மையை உறுப்பினர் செயலர் கோயம்புத்துார் உள்ளுர் திட்ட குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு அங்கீகரிப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தனமை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இணைப்பு : வரைபடம்

தலைவர்
கீரணத்தம் ஊராட்சி
கீரணத்தம்

பெறுநர்:

B.ராஜகோபால் மற்றும் B.கலைச்செல்வி
16/1,அரண்மனை தோட்டம்
மணியகாரம்பாளையம்
கணபதி,கோயம்புத்தூர்-6

நகல்கள்:

1)கீரணத்தம் ஊராட்சி கோப்புக்கு
2)கோயம்புத்தூர் உள்ளுர் திட்டகுழுமம்
உறுப்பினர் செயலர்
கோயம்புத்தூர் -12
3)சார்பதிவாளர் அலுவலர்
சார்பதிவாளர் அலுவலகம்
பெரியநாயக்கன்பாளையம்



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate